பிரஸார் பாரதி
மூஅகில இந்திய வானொலி, சென்னை-4

18 10 2024 **FRIDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்துள்ளதாக மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

3. தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் அனைத்து பிரிவுகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழக அரசு ஊழியர்களுக்கு மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. கனடா சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்காக திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப்பயணமாக வரும் செவ்வாய்க்கிழமை ரஷ்யா புறப்பட்டு செல்ல உள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ள தலைவர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் தனியார் துறையும் ஈடுபடுவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புத்தொழில் மற்றும் தொழில்நுட்ப முனையமாக இந்தியா உருவெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இதனை தொழில்முனைவோர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியத்தின்கீழ், சிறு-குறு தொழில் நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த ஆறு ஆண்டுகளில் 79 திட்டங்களுக்கு இந்த நிதியம் நிதியுதவிகளை வழங்கியுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்துள்ளதாக மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் பொன்விழா மற்றும் இந்தி மாத கொண்டாட்டங்களின் நிறைவு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஹார்வர்டு மற்றும் சிங்கப்பூர் கல்வி நிறுவனங்களில் தமிழ் இருக்கையை ஏற்படுத்தியதற்கு பிரதமர் மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று அவர் கூறினார்.

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளின் தரம் குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

அரசு உயர்நிலை பள்ளிகளில் பயிலும் 78 சதவீத மாணவர்கள் இரண்டாம் வகுப்பு புத்தகத்தைக்கூட படிக்க இயலாத சூழல் உள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை களைய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

இந்தி மொழி பேசாத மாநிலங்களில், இந்தி மாதம் கொண்டாடுவதை தவிர்க்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார் இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் பொன்விழா நிகழ்ச்சிகளுடன் இணைந்து, இந்தி மாத நிறைவு விழா நடைபெறவுள்ளதை அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து மொழிகளின் சிறப்பையும், செழுமையையும் கொண்டாடும் வகையில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தலாம் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடித்தத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பொதுமக்கள் அதிகம் கூடும் 100 இடங்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இதன் ஒரு பகுதியாக பொது நூலகத்தை இன்று திறந்துவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<<<>>>>>>

பச்சை நிற பாலின் உற்பத்தியை நிறுத்துவது தொடர்பாக எந்தவொரு முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்று ஆவின் நிறுவனம் கூறியுள்ளது.

பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு செறிவூட்டப்பட்ட புதிய வகை பாலினை அறிமுகப்படுத்துவது தொடர்பாக ஆய்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக, பொதுமக்களிடம் கருத்துக்கள் கோரப்பட உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய வகை பாலின் விற்பனை எதுவும் தொடங்கப்படவில்லை என்றும் ஆவின் நிறுவனம் அந்த செய்திக்குறிப்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதைபோல, 50 சதவீதமாக இருந்த அகவிலைப்படி, தற்போது 53 சதவீதமாக உயர்த்தப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த அகவிலைப்படி உயர்வு, முன்தேதியிட்டு ஜுலை மாதம் முதல் வழங்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, 16 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதார்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதார்கள் பயனடைவார்கள் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அனைத்து பிரிவுகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்

இன்று பெங்களூருவில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பத்திரிகை தகவல் அலுவலகம், தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி இணைந்து, பொதுவான பிரிவு ஒன்றை ஏற்படுத்தி தகவல்கள் மற்றும் செய்திகளை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

முக்கிய கோவில்கள் குறித்த நிகழ்ச்சிகளை அகில இந்திய வானொலியும், தூர்தர்ஷனும் தயாரித்து ஒளி-ஒலிபரப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேபோல், முக்கிய பிரச்சினைகள் குறித்த விவாத நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உரிமையை பறிக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடிபழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தன்னாட்சி அமைப்பான மாநில மனித உரிமை ஆணையத்தின் செயல்பாடுகளில் திமுக அரசு தலையிடுவது கண்டிக்கத்தக்கது என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தில் மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் முன்னுக்குபின் முரணான தகவல்களை வழங்கி வருவதாகவும் பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<<>>>>>>

உதகையில் புத்தக திருவிழா இன்று தொடங்கியது.

இதில் 40 பதிப்பகங்கள் சார்பாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலர் திரு எஸ் கே முருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் வரும் செவ்வாய்க்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது வரும் வியாழக்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டத்தில் தமிழக அரசு போக்குவரத்துக்கழகத்தின் புதிய தாழ்தள பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் அனுமதியின்றி மரங்கள் வெட்டுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு தர்பகராஜ் கூறியுள்ளார்.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

--------------------

நெல்லையப்பர் திருக்கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

---------------------

தென்காசி மாவட்டத்தில் உள்ள அருள்மிகு திருமலைகுமார சுவாமி திருக்கோவிலில் இ-உண்டியல் வசதி தொடங்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

கனடாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 12-10, 2-11, 11-6, 11-5 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Tom Wals** –ஐ வென்றார்.

---------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் ஆசிய மகளிர் **Netball** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை வென்றது.

---------------

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 231 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**Rachin Ravindra** 134 ரன் குவித்தார்.

குல்தீப் யாதவ் மற்றும் ரவீந்திர ஜடேஜா தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்தியா முதல் இன்னிங்சில் 46 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

---------------

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anupama Upathyaya, Tanya Hemanth, Tasnim Mir, Alap Mishra** ஆகியோர் ஒற்றையர் பிரிவிலும், ஹரிஹரன் - ரூபன் குமார் இணை மற்றும் **Arathi Sara Sunil – Varshini Viswanath Sri** இணை இரட்டையர் பிரிவிலும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<<<END>>>>>>**